1969 மார்ச் 15]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால்பெருக்குத் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டுமென்ற அடிப்படையில் அது வைப்பட்டிருக்கிறது. உண்மையில தனிப்பட்ட வர்களுக்கு உட்சுசதகை விடப்பட்டிருக்கிறது என்பது உண்மையானால்—அவர் எப்படிப்பட்டவர் ஆனாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது.

பல்லடம் சாலை—ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

*** 347 வினா : திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவு படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிடப்பட்ட திட்டம் ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரத்தில் உள்ள பிரதான சாலை—பல்லடம் ரோடும். ஈஸ்வரன் கோவில் சாலையும் சந்திக்கும் இடம் மிகவும் முக்கியமானது. உடுமலைப்பேட்டை, தாராபுரம், போன்ற ஊர்களுக்குச் செல்லும் முக்கியமான இடம். அந்தச் சாலையில் இருக்கும் நெருக்கடி காரணமாக சமீபத்தில் கூட ஐந்தாறு பேர்கள் விபத்துகளுக்குள்ளாயிருக்கிறார்கள். ஆகவே இனியாகிலும் அதை உடனடியாக விரிவுபடுத்தும் நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சந்திப்பில் பாதையின் அகலம் 55′, கழிவு நீர்க் கால்வாய் நீங்கலாக 47′, 48″ அகலம் இப்போதே இருப்பதனால், அந்தச் சந்திப்புச் சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. சு. துரைசாமி : இப்போது அந்த இடத்தில் உள்ள நெருக்கடி அதிகமாக இருப்பதனாலும், இரண்டு லாரிகள் போனாலே 40′ போதாத நிலைமை இருப்பதனால்—இன்றைக்கு அது ஒரு பிரதான சாலையாக இருப்பதால், இனியாகிலும் அப்படியொரு திட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 48′ அகலத்தில் மிகத் தாராளமாக வண்டிகள் போகலாம்.

நந்தியாறு கால்வாய்

*** 348—வினா : திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, திருமழபாடி பகுதியிலுள்ள நந்தியாறு பாசன வாய்க்காலில் உள்ள அடிஓடை பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட விளை நிலம் எவ்வளவு ?

(இ) அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் வகுக்கப்பட்டதா ?

(உ) அப்படியானால் அதன் உத்தேச செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) நந்தியாறு கால்வாயில் பாலக்கால் மழையினால் அடித்துச் செல்லப்பட்டமையினால் பயிரிடும் நிலங்கள் எவையும் பாதிக்கப்படவில்லை.

(இ) அண்டு (உ) இந்த பாலக்கால் ரூ. 1,98,000 தோராய செலவில் மீண்டும் கட்டப்பட்டுள்ளது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டு திரும்ப அடைக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பக்கத்தில் ஓடுபாலமாக இருக்கக்கூடிய இடத்தில் தண்ணீர் தேங்குவதனால்—அது பழுதடைந்திருக்கிற நிலைமையினால் இனிமேலாவது அந்தப் பாலத்தை மாற்றி பக்கா பாலமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் இப்போதுதான்—இரும்புததொட்டியோடு அந்தப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : ஒரு லட்சம் 98 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருப்பது இரும்புத் தொட்டிதான். இது குறுகலாக இருப்பதனால் தண்ணீர் வர போதுமான வழியில்லை. மழை காலத்தில் அதற்கு சிறிது தூரத்திலேயே திருமழபாடி சாலையில் இருக்கிற ஓடுபாலத்தில் தண்ணீர் தேங்கி இதை அடித்துப்போகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இதனை பக்கா பாலமாகவே மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபோலத் திட்டம் இல்லை.

சோமனூர் ரயில் நிலையம் அருகில் சுரங்கப்பாதை.

*349 வினு : திரு. கே என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா, பல்லடம் தொகுதி சோமனூர் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் உள்ள ரயில்வே கேட்டின் கீழ் சுரங்கப்பாதை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்வித திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : அந்த இடத்தில் லாரிகள், பஸ்கள், வண்டிகள் எல்லாம் போக நெருக்கடியாக இருக்கிறது. அரை மைல் தூரத்தில் ஒரு ரயில்வே பாலம் இருக்கிறது அதையாவது ரிப்பேர் செய்து பாலத்திற்கு அடியில் ரோடுபோட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரயில்வே லைன்களுக்குக் கீழ் பாலம் அமைப்பது மத்திய சர்க்காரின் வேலையாகும். உறுப்பினர் தன் கருத்தை மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அவையுரிமைக் கேள்வி.

பேரவைத் தலைமையால் அகற்றப்பட்ட ஆணையிடப்பட்ட பகுதியை "மறவன் மடல்" என்ற செய்தித்தாள் வெளியிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். "1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி அன்று திரு. ராமச்சந்திர துரை பேசிய பேச்சில் ஒரு பகுதியை